III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S. NO.34/2014

Deposition of witness for the Defendant/DW1
Respondent solemnly by Tmt.R.Santhi, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 23-07-2019

| | | |
|---|---|---|
| Name | :Sivakumar | Caste : |
| Father's/Husband's Name | :Bakthavatchalu | Calling : |
| Age | : | Religion : |
| Village | : | Taluk: |

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி- பி.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையா என்றால் உண்மைதான். பி.சா.ஆ.1ல் சுப்பையா நாயுடு சோல் புரபொரைட்டராக செங்கல் தயாரிப்பு மற்றும் விற்பனை தொழில் செய்து வந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ. 1 பதிவு செய்யப்படாத ஆவணம் என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.1ல் சுப்பையாநாயுடு வியாபரத்திற்காகவும் மற்றும் மற்ற பார்ட்னர்களுக்காகவும் முழு நேர பணி செய்ய வேண்டும் என்று கண்டுள்ளது என்றால் சரியல்ல. சுப்பையாநாயுடு ஒரு பங்குதாரர் என்ற முறையில் அவருடைய முழு நேரத்தை பணிக்காக ஒதுக்க வேண்டும் என்று கண்டுள்ளது. பி.சா.ஆ.1ல் பக்கம் 6ல் பத்தி 12ல் வங்கிக் கணக்கை சுப்பையா நாயுடு பார்ட்னர்ஷிப் பிஸினஸ்க்காக இயக்கலாம் என்று காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி-சா.ஆ.1ல் பார்ட்னெர் ஷிப் வியாபாரத்திற்காக அவர் கடன் வாங்கலாம் என்றும் பாண்டு எழுதிக் கொடுக்கலாம் என்றும் மேலும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் சுப்பையாநாயுடுவை தவிர மற்ற பங்குதாரர்கள் யாரும் கடன் வாங்குவதோ, சொந்ததிற்காகவோ, வியாபாரத்திற்காகவோ வாங்கக்கூடாது என்றும் மேலும் வியாபாரத்திற்கு எதிராக செயல்படக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1ல் மொத்த இன்வஸ்மெண்ட் ரூ.1 இலட்ச் என்று கண்டுள்ளது என்றால் அதில் சுப்பையா நாயுடு மட்டும் ரூ.50,000/- முதலீடு செய்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் பக்தவட்சலுவின் பங்கு ரூ.12,500/- என்று காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுப்பையாநாயுடுவை தவிர்த்து பக்தவட்சலு, கோவிந்தசாமி, விஜயா, சுலோச்சனா ஆகிய நால்வருக்கும் தலா மாதம் ரூ.300/-

மட்டும் வழங்கப்படும் என்று அதுவும் மற்ற பங்குதாரரின் ஒப்புதலுடன் வழங்கப்படும் என்றும் மேற்கொண்டு தேவைப்பட்டால் மற்ற பங்குதாரர்களின் அனுமதியுடன் வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுப்பையா நாயுடுவுக்கு மாதா மாதம் இவ்வளவு தான் வருமானம் எடுக்க வேண்டும் என்கிற எந்த நிபந்தனையும் பி.சா.ஆ.1ல் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் தவறாகும். சுப்பையாநாயுடுவிற்கு 50 சதவீதம் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சுப்பையாநாயுவிற்கு 50 சதவீதம் என்று குறிப்பிட்டிருந்தாலும் மற்ற பங்குதாரருக்கு மாதம் ரூ.300/- மட்டும் தான் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறாகும். பத்தி 10ல் குறிப்பிட்டுள்ள பங்குதாரர்களில் சுப்பையா நாயுடுவும் அடங்குவார். சுப்பையாநாயுடுவின் பிள்ளைகளுக்கு வருமானம் இல்லாமல் வேலையில்லாமல் ஊதாரித்தனமாக சுற்றிக் கொண்டிருந்ததால் பரிதாப்பட்டு சுய உரிமையாளரான சுப்பையா நாயுடு அவர் பெயரில் பி.சா.ஆ.1 தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் தவறாகும். பி.சா.ஆ.1ல் சுப்பையா நாயுடுவை தவிர மற்ற பங்குதாரர்களுக்கு நிர்வாக அதிகாரமோ, வங்கிக் கணக்கை செயல்படுத்தக்கூடிய அதிகாரமோ, கடன்கள் பெறும் அதிகாரமோ போன்ற எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை என்று சொன்னால் தவறாகும். மற்ற 4 பங்குதாரர்களும் வருமான வரித் துறைக்கு கணக்கு காட்டுவதற்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சொன்னால் சரியல்ல. நான்கு பங்குதாரர்களும் டம்மி பார்ட்னர்களாக இருந்தால் இன்வஸ்ட் செய்ய வேண்டிய அவசியம் இல்லை ஆனால் 4 பங்குதாரர்களும் பி.சா.ஆ.1ன் படி எவ்வளவுதொகை கொடுத்துள்ளார்கள் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. 4 பங்குதாரர்களுக்கும் முதலீடு செய்ய எந்த வசதியும் கிடையாது என்று சொன்னாலும் மேலும் பி.சா.ஆ.1ல்குறிப்பிட்டுள்ள ரூ. 1 இலட்சம் தொகை முழுவதையும் சுப்பையா நாயுடு தான் முதலீடு செய்துள்ளார்என்று சொன்னால் தவறாகும். அதனால் தான் என்னுடைய தகப்பனால் வருமான வரி கணக்கு தாக்கல் செய்ததில் விஸ்வஜோதி பிரிக்ஸ் ஒர்க்ஸ் முதலீடு செய்ததாக கணக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தவறாகும்.

வாதிதரப்பின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைப்பு.